தேதி.18.07.2025

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

MCOP. No. 89/2022 திரு.சாமுவேல்ராஜ், த/பெ.நடராஜ் ம.சா.2

<u>ம.சா.2: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை ஏதேனும் வந்ததா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் ம.சா.1 அழைத்து வந்தார். ம.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அக்காவின் கணவர். அன்று நான் எங்கு சென்று கொண்டிருந்தேன் என்றால் ஊட்டியிலிந்து கூடலூருக்கு உறவினர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்ததாக சொல்லப்படும் மோட்டார் சைக்கிள் யாருடையது என்றால் என்னுயை உறவினர் ஜெஸ்சோ என்பவருடையது. அவர் என்னுடைய அக்கா மகன் ஆவார். அவர் எங்கு சென்று கொண்டிருந்தார் என்றால் ஊட்டியிலிருந்து கூடலூருக்கு சென்று கொண்டிருந்தார். எதற்காக சென்று கொண்டிருந்தார் என்றால் அது அவருடைய சொந்த ஊராகும் அதற்கு சென்று கொண்டிருந்தார். விபத்து நடப்பதற்கு முன்னர் நான் அவரை சந்தித்தேனா என்றால் இல்லை. விபத்து நடக்கும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் காலை 8.30 மணியிருக்கும். அந்த சமயத்தில் பனிமூட்டமாக இருந்ததா என்றால் இல்லை. விபத்து எந்த இடத்தில் நடந்தது என்றால் டி.ஆர். பஜார் அணை கட்டு அருகே நடந்தது. பேருந்து எந்த திசையில் வந்தது என்றால் கூடலூரிலிருந்து ஊட்டிக்கு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. நானும் எனது அக்கா மகனும் எந்த திசையில் சென்றோம்

என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எதிர் திசையில் வந்தோம். ரோட்டின் எந்த திசையில் வந்தோம் என்றால் கிழபுறமாக வந்தோம். எனது அக்கா மகன் எனக்கு முன்னால் எவ்வளவு தூரம் சென்று கொண்டிருந்தார் என்றால் 50 அடி தூரம் முன்னால் சென்று கொண்டிருந்தார். சம்பவயிட சாலை வளைவாக இருந்தது என்றால் சரிதான். எந்தப்பக்கம் வளைவாக இருந்தது என்றால் தற்போது நினைவில் இல்லை. பேருந்தின் எந்த பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதியது என்றால் பேருந்தின் வலது முன்புறம் இருசக்கர வாகனத்தின் முன் பகுதியில் மோதியது. நான் எவ்வளவு தூரத்திலிருந்து பார்த்தேன் என்றால் 50 அடி தூரத்திலிருந்து பார்த்தேன். பஸ்ஸின் டயர் அவரின் தலைமீது ஏறி இறங்கிவிட்டது. அதனால் தலை நசுங்கிவிட்டது என்றால் அவர் தலைக்கவசம் அணிந்திருந்ததால் முகம் நசுங்கியிருந்தது. விபத்து நடந்தவுடன் நான் முதலுதவி செய்தேனா என்றால் நானும் தான் செய்தேன் கூட்டம் கூடிவிட்டது. பேருந்து அங்கு இருந்ததா என்றால் பஸ் இருந்தது பின்னர் கூட்டமாக இருந்ததால் பேருந்தை ஓட்டுநர் எடுத்து சென்றுவிட்டார். அங்கு யாரும் பேருந்தை நிறுத்த சொல்லவில்லை என்றால் நானும், வேறு யாரும் சொல்லவில்லை. என்னுடைய மாமாவிற்கு முதலில் போன் செய்தேனா என்றால் இல்லை. சாஜி என்ற இன்னொரு மாமாவிற்கு தான் போன் செய்தேன். ஏன் எனது அக்காவின் கணவருக்கு போன் செய்யவில்லை என்றால் அந்த சமயத்தில் தோன்றவில்லை அதனால் போன் செய்யவில்லை. காவல் துறையினருக்கு போன் செய்தேனா என்றால் இல்லை. அடிபட்டவர் சம்பவயிடத்தில் உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை. யார் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால்

இறந்தவரின் அப்பாவும், என்னுடைய மாமா சாஜியும் அழைத்து சென்றார்கள். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் சாஜி கொடுத்தார். அவர் சம்பவத்தை நேரில் பார்த்தாரா என்றால் இல்லை. அவர் காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் வரும்போது நான் அங்கு இருந்தேன் என்றால் சரிதான். நான் அடிபட்டவருடன் ஆம்புலன்ஸில் சென்றேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்துள்ளார்கள். வாக்குமூலம் கொடுத்துள்ளேன். என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், நான் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறுகொடுத்திருந்தால் குற்ற இறுதி அறிக்கையில் சாட்சி பட்டியலில் என் பெயர் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தின் பதிவு எண் என்னவென்றால் KA 57 F 4141 ஆகும். அதைப்பற்றி நான் சாஜியிடம் புகார் கொடுக்கும்போது சொன்னேனா என்றால் சொன்னேன். எனது அக்காவின் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு எண் என்னவென்றால் TN 43 Z 1896 ஆகும். நான் சாஜியிடம் உண்மையாலும் பேருந்தின் பதிவு எண்ணை சொல்லியிருந்தால் அவர் புகாரில் பேருந்தின் விவரத்தை சொல்லியிருப்பார் என்றும், ஆனால் புகாரில் அடையாளம் தெரியாத வாகனம் விபத்து ஏற்படுத்தியதாகத்தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இறந்தவர் என்னுடைய அக்கா மகன் என்பதால் நான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் கண்ணுற்ற சாட்சி அல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு ஒரு விபத்து ஏற்படும் சமயத்தில் பொது

மக்கள் மத்தியில் பேருந்தோ அதன் ஓட்டுநரோ தப்பிச்செல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் எனது அக்காவிற்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தானது கார்நாடக அரசு பேருந்தால் ஏற்பட்ட விபத்து அல்ல என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.